# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

**முன்னிலை**: திருமதி. ப.கனிமொழி, எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.

2026 ம் ஆண்டு ஜீலை மாதம் 20 ம் தேதி, திங்கள்கிழமை
2057 திருவள்ளுவர் ஆண்டு பராபவ வருடம் ஆடி மாதம் 04 ம் நாள்
CC No.144/2018
(CNR No: TNAL070006922018)

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>ஜெயங்கொண்டம் காவல் நிலையம்,<br>குற்ற எண்: 463/2017. |

//எதிர்//

| | | |
|---|---|---|
| எதிரி | : | தமிழ்செல்வன் (32/2026) த/பெ.தனபால்,<br>மேலத்தெரு, அங்கராயநல்லூர், அரியலூர்<br>மாவட்டம். |

<table>
<tr><td>1</td><td>குற்றம் சாட்டப்பட்டது</td><td>:</td><td colspan="3">எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 337, 304 (A)ன் கீழ்</td></tr>
<tr><td>2</td><td>குற்றச்சாட்டு வனையப்பட்டது</td><td>:</td><td colspan="3">எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 337, 304 (A)ன் கீழ்</td></tr>
<tr><td>3</td><td>சம்பவம் நடந்த நாள்</td><td>:</td><td colspan="3">10.12.2017</td></tr>
<tr><td>4</td><td>முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்</td><td>:</td><td colspan="3">10.12.2017</td></tr>
<tr><td rowspan="2">5</td><td rowspan="2">எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற நாள்</td><td rowspan="2">:</td><td>கைது செய்யப்பட்ட நாள்</td><td colspan="2">பிணையில் சென்ற நாள்</td></tr>
<tr><td>12.01.2018</td><td colspan="2">12.01.2018<br>(காவல் நிலைய பிணை)</td></tr>
<tr><td>6</td><td>குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td>:</td><td colspan="3">04.10.2018</td></tr>
<tr><td>7</td><td>கு.வி.மு.ச பிரிவு 240(1)ன் கீழ் குற்றச்சாட்டு விளக்கி வினவப்பட்ட நாள்</td><td>:</td><td colspan="3">24.08.2022</td></tr>
<tr><td>8</td><td>வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td></td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அ.சா.1 | 16.10.2024 | 16.10.2024 |
| | | | அ.சா.2 | 16.10.2024 | 16.10.2024 |
| | | | அ.சா.3 | 14.05.2026 | 14.05.2026 |
| | | | அ.சா.4 | 07.07.2026 | 07.07.2026 |
| | | | அ.சா.5 | 07.07.2026 | 07.07.2026 |
| 9 | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | : | 10.07.2026 | | |

இவ்வழக்கு 05.10.2018 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 20.07.2026ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி. C.இராஜேஸ்வரி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.உத்திராபதி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.....

## தீர்ப்புரை

1. கடந்த 10.12.2017ம் தேதி புகார்தாரர் TN 61 K 1436 என்ற Hero Hunk இருசக்கர வாகனத்தில் பின்னால் சாட்சி-2ஐ உட்கார வைத்துக்கொண்டு தா.பழூரிலிருந்து ஜெயங்கொண்டம் செல்லும் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்காக ரோட்டின் இடதுபுற ஓரமாக மாலை 18.45 மணிக்கு உத்திரகுடி வன்னியர் நகர் பஸ் ஸ்டாப் அருகில் சென்று கொண்டிருந்தபோது அதே ரோட்டில் அவருக்கு எதிரே வடக்கிலிருந்து தெற்காக வந்த TN 61 L 5357 என்ற Honda Shine வண்டியில் எதிரி செல்வநாதன் (எ) அரவிந்த என்பவரை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து அவர்களுக்கு முன்னால் சென்ற மாட்டு வண்டி மீது மோதி எதிரே வந்த புகார்தாரரின் வண்டியில் மோதியதில், புகார்தாரருக்கு உடம்பில் சொற்பகாயத்தையும், சாட்சி-2க்கு வலது காலில் கொடுங்காயத்தையும், செல்வநாதன் (எ) அரவிந்தனுக்கு தலையில் அடிபட்டு இறப்பை ஏற்படுத்தியுள்ள எதிரியின்

செய்கையானது இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழ் தண்டிக்கப்படவேண்டியவர் என இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி அறிக்கையை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A)ன் படி வழக்கினை கோப்பிற்கு எடுத்துக்கொண்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும், கு.வி.மு.ச பிரிவு 207ன் படி உள்ளதுமான வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலணை செய்ததின் பேரில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழான குற்றச்சாட்டு வனைந்து, விளக்கி வினவ எதிரி குற்றத்தினை மறுத்த காரணத்தினால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு வழக்க விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. புகார்தாரர் தரப்பில் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 320ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு இந்த வழக்கில் உள்ள குற்ற பிரிவுகள் சமாதானம் ஆகாத குற்றம் என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

6. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:–**

7. அ.சா.1 ஐஸ்வர்யா தனது சாட்சியத்தில் கடந்த 10.12.2017ம் தேதி சுமார் 07.00 மணியளவில் தானும், தனது அண்ணன் ராஜேஷ்குமாரும் தனக்கு உடல்நிலை சரியில்லை எனறு ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தோம் என்றும், உத்திரக்குடி பஸ் ஸ்டாப் அருகில் சென்றபோது, ஒரு இருசக்கர வாகனம் தனது காலில் மோதியது என்றும், அதில் தனக்கு வலது காலில் ஏழும்பு முறிவு ஏற்பட்டது என்றும், வாகனம் ஓட்டி வந்த தனது அண்ணன் ராஜேஷ் குமாருக்கும் வலது இடுப்பிலும், கையிலும், தோள்பட்டை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது என்றும், தாங்கள் இருவரும் இருசக்கர வாகனத்தில்

இருந்து கீழே விழுந்துவிட்டோம் என்றும், தங்களுக்கு எதிரே இருசக்கர வாகனத்தில் மோதிய, வாகனத்தை ஓட்டிய நபர் நீதிமன்றத்தில் உள்ள நபர் ஆவார் என்றும், அவருக்கு பின்னால் உட்கார்ந்து வந்த செல்வநாதன் என்பவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், தங்கள் ஊரைச் சேர்ந்த சின்னராஜா என்பவர் தனது அண்ணனை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 தனது அண்ணன் கொடுத்ததுதான் என்றும் என்று சாட்சியமளித்துள்ளார்.

8. அ.சா.2 பால்ராஜ் தனது சாட்சியத்தில், கடந்த 2017 ம் வருடம் ஒருநாள் தனது அண்ணன் மகன் ராஜேஷ்குமார் ஜெயங்கொண்டத்திலிருந்து உத்திரக்குடி செல்லும் மெயின்ரோட்டில், விபத்து ஏற்பட்டது என்று தான் போன் மூலம் கேள்விபட்டேன் என்றும், எதிர்த்தால்போல் வந்த வண்டி மோதி தனது மகனின் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும், எதிரே வந்த இருசக்கர வாகனத்தில் பின்னால் வந்த நபரும் இறந்துவிட்டார் என்றும், எதிரே வந்த வண்டிக்கு அருகில் மாட்டுவண்டி வந்ததால், தனது மகன் ஓட்டி வந்த வண்டி மீது மோதி, தனது மகளுக்கு காலில் எலும்பு முறிவும், தனது மண்ணன் மகனுக்கு முகம், கால், கையில் அடிபட்டது என்றும், தனது அண்ணன் மகன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

9. அ.சா.3 ரமேஷ் தனது சாட்சியத்தில், கடந்த 10.12.2017 ம் தேதியன்று மாலை 06.45 மணிக்கு மேல், ராஜேஷ்குமார் போன் செய்து, கழுவந்தோண்டிக்கும் உத்திரக்குடிக்கும் இடையேயுள்ள வன்னியர் நகர் பஸ் ஸ்டாப்பிற்கு அருகில், தனது சித்தப்பா மகள் ஐஸ்வர்யாவும், ராஜேஷ்ம் இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றுக்கொண்டிந்தபோது, அவர்களுக்கு எதிர் திசையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த Honda Shine இருசக்கர வாகனம் மோதி, விபத்து ஏற்பட்டதாகவும், அதில் ஐஸ்வர்யாவிற்கு காலில் அடிபட்டு, நடக்க முடியாமல் உள்ளார் என்றும், தனக்கு இடுப்பில் அடிபட்டு, வலியிருப்பதாகவும் ராஜேஷ் தனக்கு போன் மூலம் சொன்னார் என்று சாட்சியமளித்துள்ளார்.

10. அ.சா.4 முத்தமிழ்செல்வன் தனது சாட்சியத்தில், நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஐ தான் காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்று சாட்சியமளித்துள்ளார்.

11. அ.சா.5 குணசேகரன் சாட்சியத்தில் உதவி ஆய்வாளர் செல்வம் மற்றும் காவல் ஆய்வாளர் வேலுசாமி ஆகியோரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் தனக்கு நன்கு தெரியும் என்பதால், அவருக்காக தான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 10.12.2017 ம் தேதி ஜெயங்கொண்ட காவல் நிலைய உதவி ஆய்வாளர் செல்வம் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமணையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயளியாக சிகிச்சையில்இருந்த ராஜேஷ்குமார் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று நிலைய குற்ற எண் 463/2017, ச/பி. 279, 337, 304(A) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் வழக்கு கோப்பினை விசாரணை செய்யும் பொருட்டு ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தார் என்றும், ஆய்வாளர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம்சென்று சாட்சிகள் முத்தமிழ்செல்வன் மற்றும் கொளஞ்சிநாதன் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 தயார் செய்துள்ளார் என்றும், வழக்கு விபத்தில் இறந்த செல்வநாதன் (எ) அரவிந்தன் என்பவரின் பிரேதத்தை ஜெயங்கொண்டம் அரது மருத்துவமணை சவக்கிடங்கின் முன்வைத்து, சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை நடத்தியும் வாக்குமூலம் பதிவு செய்தும், பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.5 தயார் செய்துள்ளார் என்றும், பட்டியில் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை மற்றும் பார்வை மகசர் சாட்சிகளையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், விசாரணையின் அடிப்படையில் சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரியை தேடியபோது, 12.01.2018 தேதி 12.00 மணிக்கு ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தில் ஆஜரான எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து, நிலைய ஜாமீனில் விடுவித்துள்ளார் என்றும், விபத்தில் இறந்துபோன செல்வநாதன் (எ) அரவிந்தன் என்பவரின் பிரேதத்தை பிணக்கூறாய்வு செய்த மருத்துவர் திருமதி. கவிதா என்பவரை விசாரணை செய்து, பிணக்கூறாய்வு சான்றிதழ் அ.த.சா.ஆ.6 பெற்று அவரது

வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இவ்வழக்கு விபத்தில் காயம்பட்ட ராஜேஷ் குமார் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. ரவிச்சந்திரன் என்பவரயும் ஐஸ்வர்யா என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. வசந்தி விசாரணை செய்து, விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றுகள் அ.த.சா.ஆ.7 முதல் அ.த.சா.ஆ.10 பெற்று, அவர்களது வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இவ்விபத்தில் சம்மந்தப்பட்ட TN 61 L 5357 என்ற பதிவெண் கொண்ட Honda இருசக்கர வாகனத்தையும் TN 61 K 1436 என்ற பதிவெண் கொண்ட Hero Honda இருசக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பிரபாகர் என்பவரை விசாரணை செய்து, மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.த.சா.ஆ.11 மற்றும் அ.த.சா.ஆ.12 பெற்று, அவரது வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இத்துடன் விசாரணையை முடித்து கடந்த 12.01.2018 அன்று எதிரியின் மீது ச/பி. 279, 337, 338, 304(A) இதசவின்படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12. எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளைப் பொறுத்து கேள்வி கேட்கப்பட்டது. எதிரி சாட்சியத்தை மறுத்துரைத்தும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

13. இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலணை செய்ததில், இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

14. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

## தீர்வு

15. கடந்த 10.12.2017 ம் தேதி புகார்தாரர் TN 61 K 1436 என்ற Hero Hunk இருசக்கர வாகனத்தில் பின்னால் அ.சா.2 ஐ உட்கார வைத்துக்கொண்டு தா.பழூரிலிருந்து ஜெயங்கொண்டம் செல்லும் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்காக ரோட்டின் இடதுபுற ஓரமாக மாலை 18.45 மணிக்கு உத்திரகுடி வன்னியர் நகர் பஸ் ஸ்டாப் அருகில் சென்று

கொண்டிருந்தபோது அதே ரோட்டில் அவருக்கு எதிரே வடக்கிலிருந்து தெற்காக வந்த TN 61 L 5357 என்ற Honda Shine வண்டியில் எதிரி செல்வநாதன் (எ) அரவிந்த என்பவரை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து அவர்களுக்கு முன்னால் சென்ற மாட்டு வண்டி மீது மோதி எதிரே வந்த புகார்தாரரின் வண்டியில் மோதியதில், புகார்தாரருக்கு உடம்பில் சொற்பகாயத்தையும், அ.சா.1 க்கு வலது காலில் கொடுங்காயத்தையும், செல்வநாதன் (எ) அரவிந்தனுக்கு தலையில் அடிபட்டு இறந்துபோக காரணமாக இருந்ததாக எதிரி மீது இந்த வழக்கானது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

16.எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் வாய்மொழி சாட்சியமாக விசாரிக்கப்பட்டு சான்றாவணங்களாக அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.12 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

17. கடந்த 10.12.2017 ம் தேதி மாலை 18.45 மணிக்கு உத்திரகுடி வன்னியர் நகர் பஸ் ஸ்டாப் அருகில் விபத்து ஏற்பட்டது என்பதும், அந்த விபத்தில் புகார்தாருக்கு உடம்பில் சொற்பகாயத்தையும், அ.சா.1 க்கு வலது காலில் கொடுங்காயத்தையும், செல்வநாதன் (எ) அரவிந்தனுக்கு தலையில் அடிபட்டு இறந்துள்ளார் என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும், எதிரி தரப்பில் எதிரியின் அதிகேவம் மற்றும் அஜாக்கிரதை குறித்து மட்டும் தான் ஆட்சேபனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

18. மேற்படி ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை நிரூபிக்கும் விதத்தில் அரசு தரப்பில் புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆகவும், பிணக்கூறாய்வு சான்றிதழ் அ.த.சா.ஆ.6 ஆகவும், விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்கள் அ.த.சா.ஆ.7 முதல் அ.த.சா.ஆ.10 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.த.சா.ஆ.11 மற்றும் அ.த.சா.ஆ.12 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

19. எனவே, இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் யாதெனில், எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி இந்த விபத்தினை ஏற்படுத்தினாரா? என்பதே ஆகும். அதுகுறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில்,

இவ்வழக்கில் புகார்தாரர் இறந்துவிட்டதாக அவரது இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், கண்ணுற்ற சாட்சியான பட்டியல் சாட்சி 2 ஐஸ்வர்யா அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 10.12.2017ம் தேதி சுமார் 07.00 மணியளவில் தானும், தனது அண்ணன் ராஜேஷ்குமாரும் தனக்கு உடல்நிலை சரியில்லை என்று ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது, உத்திரக்குடி பஸ் ஸ்டாப் அருகில் ஒரு இருசக்கர வாகனம் தனது காலில் மோதியது என்றும், அதில் தனக்கு வலது காலில் எலும்பு முறிவும், வாகனம் ஓட்டி வந்த தனது அண்ணனுக்கு வலது இடுப்பிலும், கையிலும், தோள்பட்டை ஆகிய இடங்களில் காயமும் ஏற்பட்டு இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டோம் என்றும், தங்களுக்கு எதிரே இருசக்கர வாகனத்தில் மோதிய, வாகனத்தை ஓட்டிய நபர் நீதிமன்றத்தில் உள்ள நபர் ஆவார் என்றும், பின்னால் உட்கார்ந்து வந்த செல்வநாதன் என்பவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவம் நடந்தது இரவு 07.00 மணி அப்போது இருட்டாக இருந்தது என்றும், தனக்கு உடம்பு சரியில்லாமல் இருந்ததால், தான் தலையில் போர்த்தியிருந்தேன், அதனால் தான் எதிரியை பார்க்கவில்லை என்று சாட்சியமளித்துள்ளார். எனவே, அ.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியம் முதல் விசாரணை சாட்சியத்திற்கு முரண்படும் வகையில் உள்ளது.

20. அ.சா.2 மற்றும் அ.சா.3 தங்களது சாட்சியத்தில் கடந்த 2017ம் வருடம் ஒருநாள் தனது அண்ணன் மகன் ராஜேஷ்குமார் ஜெயங்கொண்டத்திலிருந்து உத்திரக்குடி செல்லும் மெயின்ரோட்டில், விபத்து ஏற்பட்டது என்று தாங்கள் போன் மூலம் கேள்விபட்டதாக சாட்சியமளித்துள்ளார்கள். எனவே, அ.சா.2 மற்றும் அ.சா.3 இந்த வழக்கினை கேள்விபட்ட சாட்சிகள் என்பதும் இந்த வழக்கு விபத்தை நேரில் பார்க்கவில்லை என்பது தெரிய வருகிறது.

21. பார்வை மகசர் சாட்சியாக முன்னிடப்பட்டுள்ள அ.சா.4 தனது சாட்சியத்தில் பார்வை மகசரில் உள்ள கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டதாக சாட்சியமளித்துள்ளதால், அவர் அரசுதரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

22. அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், எதிரி தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி இந்த வழக்கு விபத்தை ஏற்படுத்தியதாக கண்ணுற்ற சாட்சிகள் யாரும் எந்த ஒரு சாட்சியத்தையும் முன்வைக்கவில்லை. எனவே, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாணவங்கள் வாயிலாக எதிரி மீது சாட்டப்பட்ட குற்றத்தை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, சந்தேகத்தில் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

23. முடிவாக எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றத்தில் எதிரி **"குற்றவாளி இல்லை"** என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)ன் கீழ் **விடுதலை** செய்து இந்ந நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

24. எதிரியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப் பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

25. அரசு தரப்பில் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 20ம் நாள் திங்கள்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-P.Kanimozhi)
நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.

<u>அட்டவணை : –</u>

<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>

அ.சா.1 – ஐஸ்வர்யா

அ.சா.2 – பால்ராஜ்

அ.சா.3 – ரமேஷ்

அ.சா.4 – முத்தமிழ்செல்வன்

அ.சா.5 – குணசேகரன், காவல் உதவி ஆய்வாளர்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

அ.த.சா.ஆ.1 – புகார்

அ.த.சா.ஆ.2 – பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து

அ.த.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

அ.த.சா.ஆ.4 – மாதிரி வரைபடம்

அ.த.சா.ஆ.5 – பிரேத விசாரணை அறிக்கை

அ.த.சா.ஆ.6 – பிணக்கூறாய்வு சான்றிதழ்

அ.த.சா.ஆ.7 – விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்

அ.த.சா.ஆ.8 – விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்

அ.த.சா.ஆ.9 – விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்

அ.த.சா.ஆ.10 – விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்

அ.த.சா.ஆ.11 – மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 61 L 5357)

அ.த.சா.ஆ.12 – மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 61 K 1436)

**<u>அரசுத்தரப்பு சான்றுப்பொருட்கள்</u> :** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்</u> :** இல்லை

(Sd/-P.Kanimozhi)

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**ஜெயங்கொண்டம்.**

//True Copy//

நீதித்துறை நடுவர் எண்.1,

ஜெயங்கொண்டம்.